சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 17/2020

**PW 2 காளிமுத்து** **14.11.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தான் காளிமுத்து என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன வேலைக்கு சென்று வருகிறேன் என கேட்டால் தேங்காய் லோடு ஏற்றுவதற்கு சென்று வருகிறேன். நானும் மனுதாரரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். விபத்தானது எப்போது எங்கு நடந்தது என்பது நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். விபத்தானது 2ம் தேதி 3ம் மாதம் நடந்தது வருடம் ஞாபகமில்லை எப்போது விபத்து நடந்தது என கேட்டால் மாலை 6 மணியளவில் விபத்து நடந்தது. சம்பவ இடத்தில் நான் இருந்தேன் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. இறந்து போன நபர் விபத்து சமயத்தில் என்ன செய்து கொண்டிருந்தார் என்று கேட்டால் ரோட்டை கடப்பதற்காக ரோட்டில் நின்று கொண்டிருந்தார். ரோட்டை கடக்கும் போது தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல, அவர் ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்தார். விபத்தானது 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும் இறந்து போனவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல

இறந்து போன நபர் ரோடடை சரியாக பார்த்து கடந்திருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் சரியல்ல. அவர் ரோட்டின் ஓரமாக நின் று கொண்டிருந்தார் இறந்து போன நபர் என்ன வேலைக்கு சென்று கொண்டிருந்தார் என கேட்டால் விவசாய கூலி வேலைக்கு சென்றார். இறந்து போன நபரின் வருமானத்தை பொறுத்து எனக்கு தெரியுமா என்றல் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் மனுதாரரும் நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி